**செ. கு. எண்:105** **நாள்:07.09.2019**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 7.9.2019</u>**

உலகில் எந்த நாடும் செய்திராத முயற்சியான நிலவின் தென் துருவப் பகுதிக்கு சந்திரயான் – 2 விண்கலத்தை ஏவும் திட்டத்திற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்ட இஸ்ரோவின் தலைவர், விஞ்ஞானிகள், பொறியாளர்கள் உள்ளிட்ட அனைவரது முயற்சியும், உழைப்பும் மிகவும் பாராட்டுக்குரியது.

இஸ்ரோ விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்கள் இத் திட்டத்தில் மட்டுமல்லாமல் மேலும் பல திட்டங்களிலும் கண்டிப்பாக பல வெற்றிகள் பெறுவார்கள் என்ற திடமான நம்பிக்கை எனக்கும், நாட்டு மக்கள் அனைவருக்கும் உள்ளது. அவர்கள் புதுநம்பிக்கையுடனும் ஊக்கத்துடனும் செயல்பட்டு வெற்றிகள் பல பெற என் சார்பாகவும், தமிழ்நாட்டு மக்கள் சார்பாகவும் மனதார வாழ்த்துகிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**